செ.வெ.எண். 25 நாள்: 07.09.2017

**திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பூ நாதசுவாமி திருக்கோவிலில் மூலிகை ஓவியங்களை புணரமைக்கும் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.ராமச்சந்திரன் அவர்கள் ஆய்வு செய்தார்.**

திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பூ நாதசுவாமிகள் திருக்கோவிலில் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் பழைமையான மூலிகை ஓவியங்களை புணரமைக்கும் பணிகளை திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.ராமச்சந்திரன் அவர்கள் இன்று (07.09.2017) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பூ நாதசுவாமிகள் திருக்கோவில் கோபுரத்தின் உள்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிரகார அறைகளில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு மர வேலைபாடுகள் செய்யப்பட்டு மூலிகையில் சுவர் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் சிதிலமடைந்து வருவதை அறிந்து, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2014-ம் ஆண்டில் மூலிகை ஓவியங்களை தொண்மை மாறாமல் புணரமைப்பு செய்திட ரூ.1 கோடியே 42 லட்சம் ஒதுக்கீடு செய்தார்கள். புணரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. பழமை மாறாமல் மூலிகை வர்ணங்களைக் கொண்டு இப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் கும்பாபிஷேகம் 2004-ம் ஆண்டு நடைபெற்றது. தற்போது, ரூ.1.17 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று 6 மாத காலத்திற்குள் கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை இணைய ஆணையர் திரு.பரஞ்சோதி, உதவி ஆணையர் திரு.சாத்தையா, உதவி கோட்டப்பொறியாளர் திரு.செல்வராஜன், திருக்கோவில் செயல் அலுவலர் திரு.கனகசுந்தரம் முக்கிய பிரமுகர்கள் திரு.பெரிய பெருமாள், திரு.கபீரியல் ராஜன், திரு.தளபதி ராம்குமார், திரு.சேர்மபாண்டி, திரு.கருத்தப்பாண்டி, திரு.அருவேல்ராஜ், திரு.விஜயகுமார், திரு.பரமசிவ ஐயப்பன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி